Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 18

# ஈழநாடு

EELA NADU

தபாற் இலக்க எண் : 49
போன் 889

National Tamil Daily

மலர் 9
இதழ் 144
தேசிய தினசரி

பிலவங்க ஆனி 21 ரபி அவ். 26 புதன்கிழமை [5-7-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல் முதலியவற்றிற்கும்
நவீன முத்துமாலை
முடிமயிர் வகைகளுக்கும்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# பருப்பு, பயறு தட்டுப்பாடு: கடைகளில் கிடையாது

## உதவி உணவு அதிகாரி அவை கிடைக்கும் என்கிறார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் மைசூர் பருப்பு, துவரம் பருப்பு, பயறு ஒன்றுமே கிடையாதெனக் கடைக்காரர்கள் வாடிக்கையாளர்களுக்கு நேற்று கைவிரித்தனர். ஆனால், இதனை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி மறுத்து பயறு வகைகள் யாழ்ப்பாணத்தில் மேலதிகமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

துவரம் பருப்பு, பயறு ஆகியவை தனிப்பட்டகடைகளில் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், மைசூர் பருப்பு யூனியன்களில் போதியளவு பெற்றுக்கொள்ளமுடியுமென்றும் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்தார்.

இதுபற்றி ஒரு வர்த்தகரைக் கேட்டதற்கு, யாழ்ப்பாணத்தில் எந்தக் கடையிலும் பயறு, பருப்பு வகைகள் பெற்றுக்கொள்ளமுடியாதென்றும், தங்களிடம் கையிருப்பில் இல்லையென்றும் தெரிவித்தார்.

---

## உள்நாட்டமைச்சரை ஒழித்துக்கட்ட முயன்றார்களா?

### விசாரணை செய்ய இரகசிய பொலிஸாருக்கு பதில் ஐ. ஜி. பி. உத்தரவு

கொழும்பு, செவ்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் தஹநாயக்காவைக் கொலை செய்ய முயற்சிசெய்ததாகக் கூறப்படும் சம்பவம்பற்றி விசாரணை செய்யும்படி இரகசிய பொலிஸ் கோஷ்டியொன்றுக்கு பதில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவிட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக செய்யப்பட்ட புகாரில் புக்கி ஒருவரும், லோண்டரி தொழிலாளி ஒருவரும் டாக்டர் தஹநாயக்காவை ஒழித்துக் கட்டத் திட்டம் போட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வாக்குள்ள சில புக்கிகளுடன் பொலிஸார் சேர்ந்து கொண்டாடுவதால் காலிக்கு வெளியிலுள்ள பொலிஸாரைக் கொண்டே இந்த விசாரணையை நடாத்தும்படி உள்நாட்டமைச்சர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 15 லட்சம் கடிதங்கள் தரம் பிரிக்கப்பட்டன

### இருதினங்களில் நிலைமைசரியாகிவிடுமாம்

கொழும்பு, செவ்.

15 லட்சம் கடிதங்கள் நேற்று தரம் பிரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. 45 தபால் நிர்வாபக பகுதி உத்தியோகத்தர்களும் விசேஷமாக நியமிக்கப்பட்ட 20 பேரும் தரம்பிரிக்கும் வேலைகளை மேற்கொண்டார்கள்.

லோட்டஸ் வீதியிலும், மக்கலம் வீதியிலும் உள்ள தபால் தரம் பிரிக்கும் நிலையங்களில் தரம்பிரிக்கும் வேலைகள் நடைபெற்றது.

இன்று காலை கொழும்பு நகரத்தில் தபால் ஊழியர் மிகத் தொகையான கடிதங்களை கொண்டு சென்று விநியோகித்தனர். பார்சல் காரியாலயத்திலும் . தரம் பிரிக்கும் வேலைகள் நடைபெற்று வெளிநாட்டு பார்சல்கள் அனுப்பப்பட்டன.

சென்ற மாதம் 29-ம், 30-ம் திகதிகளில் அனுப்பப்பட்ட சுமார் 15 லட்சம் கடிதங்கள் விநியோகம் செய்யப்பட்டு விட்டன. இன்னும் 15 லட்சம் கடிதங்கள் தரம்பிரிக்க வேண்டியிருக்கின்றன. விமானத் தபால்களும் தரம்பிரிக்கப்பட்டுவிட்டன.

தரம் பிரிக்கும் நிலையங்களில் இன்னும் இரு தினங்களில், நிலமை பழைய நிலைக்கு வந்து விடுமென்று தபால் இலாகா உத்தியோகத்தர் ஒருவர் கூறினார்.

## கி.ச. அங்கத்தவர்ரயில்மோதிமரணம்

### மாடு நசுங்கிச் செத்தது; வண்டி சுக்குநூறுகியது

சங்கானை, செவ்வாய்

உடுவில் கிராமசபை அங்கத்தவர் ஒருவர் பரிதாபமான மரணத்துக்குள்ளானார். 9ம்வட்டார அங்கத்தவரான திரு. மயில்வாகனம் குமாரலிங்கம் [32] தமது மாட்டுவண்டியைச் செலுத்திச்சென்றபோது பாதுகாப்பற்ற ரயில் கடவையில் வைத்து ரயில்அவரைமோதியதால் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார். வண்டியும் சுக்கு நூறுகியதுடன் வண்டியில் பூட்டியிருந்த மாடுகளிலொன்றும் நசுங்குண்டு இறந்தது.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இறந்தவரான திரு. குமாரலிங்கம் 4பெண் குழந்தைகளின் தந்தையாவார். இவர் கடந்த 5வருடங்களாக உடுவில் கிராமசபை அங்கத்தவராகப்பணியாற்றினார்.

இறந்தவர் தனது தோட்டத்துககு எருப்பறித்து விட்டு வண்டியுடன் வீடு திரும்பியதாகவும் இடையே இணுவில் ரயில் நிலையத்துக்கும்காரைக்காடு கோவிலுக்குமிடையில்உள்ளபாதுகாப்பற்ற ரயில் கடவையில் வண்டியில் பூட்டியிருந்த மாடொன்றின் ஒரு கால் தண்டவாளத்தில் சிக்கிக் கொண்டதாகவும் இவ்வேளையில் வந்து கொண்டிருந்த ரயில் மோதியதன்மூலம் மரணம் சம்பவித்ததாகவும் தெரியவந்தது.

நல்லூரில்

### கதிர்காம விழா

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் எதிர் வரும் 7-ம் திகதி வெள்ளிக்கிழமைகதிர்காம உற்சவ விழா கொண்டாடப்படவிருக்கிறது. அன்று மாலை 3 மணிக்கு விநாயகப்பெருமானுக்கு விசேஷ ஆராதனையுடன் ஆரம்பமாகும் இவ்வுற்சவ விழா தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

### அன்னதானம

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கதிர்காமஉற்சவ விழா நடைபெறும் 16தினங்களிலும் நல்லூர்க்கதிர் வேலாயுதசுவாமிமடாலயத்தில் வழமைபோல பல பெரியார்களின் உதவியால் அன்னதானம் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'இவ்வளவு இலங்கையரும் இங்கு என்ன செய்கிறார்கள்?'

### லண்டனில் ஸ்ரீமா அதிர்ச்சி

லண்டன், ஜூலை 4

''இவ்வளவு இலங்கையரும் லண்டனில் என்னசெய்கிறார்கள்? விடுமுறையைக் கழிப்பதற்காக யாத்திரை செல்கிறோம் என்று கூறி இங்கு வந்துவிட்டு அப்படியே திரும்பாமல் தங்கிவிடுகிறார்கள். இப்படியான ஊழல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்'' என்று இலங்கைஎதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தம்மைச் சந்தித்த பத்திரிகை நிருபர் ஒருவரிடம் இங்கு கூறினார்.

யூகோஸ்லேவியாவில் வைத்திய சிகிச்சையை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பும் வழியில் லண்டனில் தங்கினார். திருமதி ஸ்ரீமாவோ தேகாரோக்கியத்துடனும், கலகலப்பாகவும் காணப்பட்டார். அவரது மகன் அனுராவும் கூட இருந்திரர்.

''இலங்கையில் நடைபெற்ற இடைத்தேர்தல்களிலெல்லாம்வெற்றி உங்கள் பக்கமாக இருக்கிறது. அப்படியானல் அடுத்த பொதுத்தேர்தலில் நீங்கள் பதவிக்கு வந்தால் நாட்டின் முன்னேற்றத்துக்கு என்ன செய்வீர்கள்?'' என்று நிருபர் கேட்டதற்கு,''உடனடியாக உணவுப் பிரச்னைக்கு திர்வு காண்போம். ஊழல்களைப் போக்குவேன், இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன்'' என்று ஸ்ரீமாவோ கூறினர்.

களத்தவா இரட்டை கொலைவழக்கு

## 'தந்தை பெரேராவுக்கும் சம்பந்தமிருக்கலாம்'

அநுராதபுரம், செவ்

'சம்பவம் நடந்த தினத்திற்கு சிலநாட்களுக்கு பின்னர் என் தகப்பனுரான பி. கே. டி. பெரேராவும் அல்பிரட் டீசொய்ஸாவும், மதவாச்சியில் நடந்த கொள்ளையில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என நான் சந்தேகிக்கின்றேன்.

களத்தவா இரட்டைக் கொலைவழக்கில் சாட்சியமளித்த கே. சோமதாசா பெரேரா மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு அநுராதபுரம் மாஜிஸ்திரேட் திரு. பரின்தா ரணசிங்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் அல்பிரட் டிசொய்சா, பி.பியதாசா, வில்லியம் வேர்னண்டோ ஆகியோர், பி. கே. டி. பெரேரா, ஜூலியஸ் சந்திரதாசா ஆகியோரை கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி ஜி. பொன்னம்பலத்தால் குறுக்கு விசாரணைசெய்யப்பட்ட போது சுமனதாசா பெரேரா கூறியதாவது: அநுராதபுரத்திலுள்ள அல்பிரட் டிசொய்சாவின் கருச்சில் வேலைக்கு வந்தபோது என்னுடன் என்ன சாமான்கள் கொண்டு வந்தேன் என்பது எனக்கு ஞாபகமில்லை. அநுராதபுரத்திற்கு நான் எனது தகப்பனுருடன் செல்லவில்லை. ஆனல் எனது தகப்பனர் அங்கு சென்றார் என்று எனக்குத் தெரியும்.

முதல் தடவையாக நான் அநுராதபுரத்திற்கு சென்றபோது, ஒரு சூட்கேசை என்னுடன் கொண்டுசெல்லவில்லை. ஒரு கடுதாசியில் எனது துணிகளைச் சுற்றிக் கொண்டு சென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஒன்றுபட்டால்உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு.

— பாரதியார்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

ஈசுரப்பாணவம் பிலவங்கவருடம் ஆனி மீ 21உ (5-7-67)

## கூட்டுறவு

சர்வதேச கூட்டுறவுத் தினம் இன்று இலங்கை முழுவதிலும் கொண்டாடப்படுகிறது. 1910-ம் ஆண்டில் கூட்டுறவு இயக்கம் இலங்கையில் ஆரம்பமானது. ஐம்பத்தி ஏழு ஆண்டுகளில இங்கு கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. இதற்கு ஏற்பட்ட இடையூறுகள் என்ன என்பதுபற்றிக் கூட்டுறவாளரும் பொது மக்களும் ஆராய்ந்து இனியும் கூட்டுறவு இயக்கத்தை எப்படி நல்ல முறையில் வளர்த்துப் பயன் பெறலாமென்பதை தீர்மானிப்பதற்கு இன்றைய தினம் பயன்பட வேண்டும்.

கூட்டுறவு இயக்கம் இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் வளர்ச்சியடைந்திருக்கிறதென்றும் பொதுமக்களுக்குப் பெரும் பயன் அளித்து வருவதாகவும் பெருமையுடன் பலரும் பேசிக்கொள்கின்றனர். சென்ற யுத்த காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பொதுமக்களுக்கு, அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களைப்பங்கீட்டு முறையில் வழங்கியதும் அதன்பின்னரும்கூட கூட்டுறவுச்சங்கங்கள் பல பொதுமக்களுக்குப் பெரும் உதவி புரிந்தும் வந்திருக்கின்றன.

ஆனால் இதேநிலை இன்றும் இருக்கிறதென்று சொல்ல முடியுமா? கூட்டுறவாளர்களுக்குள்ளேயேகூட கூட்டுறவு இல்லாமல் போய் வேற்றுமை அதிகரித்து அதன் விளைவாகப் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கூடக் கிடைக்காமல் போவதுண்டு. கூட்டுறவுச் சங்கங்களிலும் சமாஜங்களிலும் 'பெருச்சாளிகள்'' நுழைந்து 'சுரண்டி' விடுவதும் கடந்த காலங்களில் கண்ட உண்மை.

''கூட்டுறவு என்பது வியாபார அமைப்புமுறையிலும் பார்க்க மேலானது. அது ஒரு வாழ்க்கை வழியாகும். இவ்வாழ்க்கை வழியின் பொருளாதாரப் பண்பு என்பது பொருளாதாரத் தேவைகளைச் சுரண்டும் தனவந்தக் கொள்கையை நீக்குவதாகும். ஒழுக்க அம்சங்களான நேர்மையும் திறமையும் பொருளாதார அபிவிருத்திக்கு முதற் தேவைகளாகின்றன. ஏனெனில், சங்கக் கருமங்களில் உறுப்பினர்கள் நேர்மையும் திறமையும் அற்றவர்களாகவிருப்பின் ஒரு சங்கம் முன்னேற்றமடையாது. சங்கத்தை உயர்நிலையிற் கொண்டு வெற்றியடைவதற்கு, சங்கத்தால் வகுக்கப்பட்ட கோட்பாடுகளையும் உறுப்பினர்கள் ஒரேமனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரே தீர்மானத்தின் பயனாக கூட்டுறவு மக்களின் பொருளாதார, ஒழுக்கத் தரங்களை உயர்த்துகின்றது'' என்று கூட்டுறவுக் கமிஷனர் திரு. பாலித வீரமன் விடுத்துள்ளசெய்தியில் குறிப்பிட்டிருப்பது கூட்டுறவாளர்களும் பொது மக்களும் சிந்தித்து செயலாற்ற உதவ வேண்டும்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் மந்த நிலையை அடைவதற்கும் பொது மக்கள் கூட்டுறவுச்சங்கங்கள்மூலம் சிறந்த பயனைத் தொடர்ந்து பெற முடியாதிருப்பதற்கும் இங்கு ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக ஒரு திட்டவட்டமான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அமைத்துக் கொள்ளாததாகும். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இறக்குமதி உரிமையுடையது. இதன் தயவில்தான் பொதுமக்களின் கூட்டுறவுச் சங்கங்களும் இருக்க வேண்டியுள்ளன. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கும், சில தனியார் ஸ்தாபனங்களுக்கும் இறக்குமதி செய்ய அனுமதியளித்துள்ள அரசாங்கம் நல்ல நிலையிலுள்ள, இறக்குமதி வர்த்தகம் செய்ய விரும்பும் கூட்டுறவுச் சங்க சமாஜங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன? இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் சிறிய கிராமம் முதல் பெரிய பட்டினம்வரை வளர்ச்சியடைந்து நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் பேருதவியாக இருக்கிறது. அங்கு கூட்டுறவுத் துறை சம்பந்தமாக அரசாங்கத்துக்கு திட்டவட்டமான கொள்கை இருப்பதே இதற்குக் காரணம். கூட்டுறவு இயக்கம் அரசாங்க உதவியில்லாமல் இயங்க வேண்டும். இதேசமயம் இதற்கு அரசாங்கத்தின் இடையூறும் இருக்கக் கூடாது.

# கூட்டுறவு — நாட்டு உயர்வு

சர்வதேசக் கூட்டுறவு தினவிழா, இன்று நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. மக்களுக்காகச் சமத்துவ அடிப்படையில் இலாபம் கருதாது நடாத்தப்படும் ஒரு நிறுவகமே கூட்டுறவுச் சங்கமாகும். இலங்கையில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பமாகி 50 ஆண்டுகளுக்கு மேலாகின்றன.

''கூட்டுறவு'' என்பது அதன் சாதாரண கருத்தின்படி ''சேர்ந்து உழைத்தல்'' என்னும் பொருள்படும். அதன் விசேட கருத்தின்படி, பொருளாதார நன்மை பயக்கும் பொதுத் தேவையொன்றை நிவர்த்தி செய்ய மக்கள் சமத்துவஅடிப்படையில், தாமாகவே விரும்பி ஒன்றுசேரும் அமைப்பு முறை என்னும் பொருளாகும்.

ஒரு கூட்டுறவுச் சங்கம் தன்னினத்து இயல்புடைய சுபாவமுடையதாகும். ஏனைய வியாபார நிறுவகங்களிலும் பார்க்க, கணிசமான அளவில் வேறுபடும் ஒரு விசேட வியாபார அமைப்பு முறையாகும். இது ஒரு பொது அல்லது இலாபம் கருதும் நிறுவகமும் அல்ல. பொருளாதார சுரண்டலை அகற்றுதல் இதன் முக்கிய அம்சமாகும்.

மூலதனத்தை செலுத்திய வகையில் பங்காளிகள் ஒன்று சேர்ந்து, பங்குகளின் அடிப்படையில் அவர்களுக்கிடையே பகிர்ந்துகொள்ளக்கூடிய இலாபத்தைப் பெறுதலே ஒரு சாதாரண வியாபார நிறுவகத்தின் நோக்கமாகும். வாடிக்கையாளர்களும் பங்காளிகளும் ஒரே நபர்களாகவிருக்கும் அவசியம் ஏற்படாது. பொது மக்களின் பொருளாதாரத் தேவைகள் பங்காளிகளினால் சுரண்டப்படுவதே இதன் விளைவாகும்.

ஒரு கூட்டுறவுச் சங்கமானது, மக்கள் மூலதனம் செலுத்துபவர்களாக ஒன்று சேராது, பொதுப் பொருளாதாரத் தேவையுடையவர்களாக ஒன்று சேரும் வியாபார நிறுவகமாகும். பொதுத் தேவையுடையவர் என்ற அடிப்படையில் சேர்த்துக்கொள்ளத் தகுதி வாய்ந்தவராய் இருந்தால் மட்டுமே உறுப்புரிமை கோருபவருக்குப் பங்கு ஒதுக்கப்படும். எனவே அவர்கள் மக்கள் என்ற முறையில் ஒன்றுகூடுகிறார்கள். கூட்டுறவின் முதலாவது தத்துவம் இதுவாகும்.

தங்கள் பொதுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு யாவரும் ஒன்றுசேர்ந்து உழைப்பதினாலும், ''நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பாடுபடும் ஒவ்வொரு உறுப்பினரினதும் நேர்மையிலேயே முயற்சியின் வெற்றி தங்கியிருப்பதினாலும்'' சேர்க்கை சுய விருப்பத்தினாலாகவேண்டும். இதுவே அடுத்த தத்துவமாகும்.

உறுப்பினர்களின் பொதுப் பொருளாதாரப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்குச் சங்கம் முயலுவதே மற்றத் தத்துவமாகும். அதாவது, உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குச் சங்கம் செயலாற்றுகின்றது.

கீழ்க்காணப்படுபவை கூட்டுறவின் ஐந்து அடிப்படைத் தத்துவங்களாகும்.

O மக்கள் என்ற முறையில் உறுப்பினர்கள் [இணைதல்.] O சமத்துவ அடிப்படையில். O தாமாகவே விரும்பி, O தங்களின் பொதுப் பொருளாதாரத் தேவைகளைநிவர்த்திசெய்ய O இத்தேவைகளையுடைய எவரும் உறுப்புரிமைக்குத் தகுதி யுடையவர்களாவர்.

ஒரு சங்கமானது கூட்டுறவாவதற்கு இத்தத்துவங்களை ஆரம்பத்திலிருந்தே கடைப் பிடிக்கவேண்டும். யாதேனும் பிரிக்கக்கூடிய வியாபார மிகை இருக்கும் போது கட்டப்பாடான வேறு

[6-ம் பக்கம் பார்க்க]

## முருகதாஸ் சக்திபஜனை

யாழ்ப்பாணம், புதன் இன்று புதன்கிழமை மாலை 7 மணி முதல் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஸ்ரீ காளிதேவி ஆலய முன்றலில் பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகளின் ''சக்தி-பஜனை'' நடைபெறும்.

ஆசிரியருக்குக் கடிதம்

# நாவலர்குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும்

ஆறுமுகநாவலர் பெருமானால் 1864-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிதம்பரம் ஆறுமுகநாவலர் வித்தியாசாலைத் தருமங்களின் உரிமையாளராக இருந்த திரு. ந. க. சதாசிவம் பிள்ளையவர்கள் எழுதிய சாதனப்படி கலாசாலையையும் தருமங்களையும் ஆறுமுகநாவலர் மாணுக்க பரம்பரையில் ஒழுங்கு முறையுள்ள ஒருவரையே பலரையோ நிர்வாகப் பொறுப்பில் வைத்தல் வேண்டுமென உள்ளது. தனக்குப் பின்வருவோர் அவ்வாறு செய்யாவிட்டால் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை டிரஸ்டியே ஒழுக்கமுடையோரை டிரஸ்டியாக நியமித்தல் வேண்டுமெனவும் எழுதப்பட்டுள்ளது. இதுவே சென்னை ஹைகோர்ட் தீர்ப்பும் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை அரசினர் நிர்வாகத்திற்கு உரிமையாகிவிட்டதால் சதாசிவம்பிள்ளையவர்கள் பணித்தபடி மாணுக்க பரம்பரையில் வந்தவரே அத்தருமங்கள் நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாவலர் பெருமானுடைய மாணுக்கப் பரம்பரையில் வந்த ஒழுக்கமுடைய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களே அத்தருமங்களைப் பாதுகாக்கவேண்டியது கடமை.

நிறுவியோரது சாதனப்படி அத்தருமங்கள் நடைபெறவில்லை. ஆதலினால் யாழ்ப்பாணத்திலிருந்தே தக்கவரொருவரையோ பலரையோ சைவநன்மக்கள் தெரிந்தெடுத்து டிரஸ்டியாக அனுப்புதல்வேண்டும். தருமச்சொத்துகளில் வரும் வருவாய்கொண்டு எதையும் செய்யவேண்டுமே தவிர தாவசச் சொத்துக்களை கிரயம், பந்தகம், போக்கியம் முதலியன செய்தலாகாதெனவும் அவ்விதம் செய்தால் அவைகள் செல்லத்தக்கவையல்ல எனவும் சாதனத்திலுள்ளது.

1874-ம் ஆண்டு நாவலரவர்கள் சைவமடாலயமமைத்துச் சைவப்பணி செய்யவென நல்லூர் தெற்கு வீதியில் வாங்கிவிட்ட நிலத்தில் அப்பணிகள் செய்யப்படவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள நாவலரது சொத்துக்களனைத்தையும் மடாலயப் பணிக்கு அரசினரிடமிருந்து பெறுதல் வேண்டும்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் நாவலர் பெருமையை நினைத்து சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற வேண்டிய தருமங்களையும் மடாலயப்பணியையும் சரிவர என்றென்றும் தொடர்ந்து ஒழுங்கு முறையில் செய்யத்தக்கவாறு சைவசீலமுடைய நன்மக்கள் பொதுச்சபையைத் தமது தலைமையில் நன்முறையில் அமைக்குமாறும் சைவநன்மக்களனைவரையும் ஒன்று திரண்டு முன்வருமாறும் அழைக்கிறோம். நாவலர் பணியை மறவாதீர்.

புலவர் த. வடிவேலன்

## நாட்டிலும் நகரிலும்

சமீபத்தில் நண்பர் ஒருவர் கல்யாண வீட்டிற்குப் போயிருந்தார். பழைய தமிழ் ஆசார முறைப்படி ஆசனம் கம்பளம்ஆகையால் தாம் அணிந்து கொண்டு போன செருப்பு ஜோடியை வெளியே கழற்றி வைத்துவிட்டு உள்ளே போய்விட்டார். கல்யாணத்துக்கு வந்த மற்ற விருந்தினர்களும் அவ்விதமே தங்கள் காலணிகளை வெளியே வைத்துவிட்டு உள்ளே போனார்கள். கல்யாணம், பந்தி எல்லாம் முடிந்து நண்பர் தம் வீட்டுக்குப் புறப்பட வெகு நேரமாகி விட்டது. வெளியே வந்து பார்த்த போது அவருடைய ஒரு ஜோடி செருப்பு மட்டுமே இருந்தது. அதை அணிந்து கொண்டு போய் விட்டார்.

இரண்டு நாள் கழித்து ஒரு கால் செருப்பு கடிக்கத் தொடங்கியது. இவ்வளவு நாளும் கடிக்காத செருப்பு இப்பொழுது இருந்தாற் போல கடிக்கத் தொடங்கியதும் அதை உற்று பரிசீலனை செய்த போதுதான் அவருக்கு சங்கதி விளங்கியது.

அவர் இப்பொழுது அணிந்திருந்த செருப்புகளில் ஒன்றுதான் அவருடையதென்பதைக் கண்டார். மற்ற செருப்பு வேறெவருக்கோ சொந்தமானது. அந்த கல்யாண வீட்டில் இரண்டும் மாறிப் போயின. இரண்டு பேரின் செருப்பு ஜோடிகளும் ஒரே நிறமாயும் ஒரே இனமாயும் இருந்த படியால் மற்ற நபர் குவியலாயிருந்த செருப்பு ஜோடிகளில் தம்முடைய ஒன்றையும் நண்பரின் ஒன்றையும் மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்.

நண்பர் இவ்வளவோடு தப்பி வந்தது பெரிய காரியம் என்றே நினைக்கிறேன். ஏனென்றால் இப்படியான சந்தர்ப்பங்களில் பலர் தங்கள் செருப்புகளை ஒரேடியாய் பறிகொடுத்து விட்டு திரும்பி வந்த சம்பவங்களும் எனக்கு நினைவிருக்கின்றன.

மேனாட்டவர்களிடையே ஒரு நல்ல வழக்கம் இருக்கிறது. பல பேர் கூடும் இடங்களில் தொப்பி, மேல் கோட், கைப் பிரம்பு முதலியவற்றை பத்திரப் படுத்தி வைத்து கூட்டம் முடிந்து திரும்பும் போது அவரவருக்கு சொந்தமான பொருட்களை அவரவரிடம் திருப்பிக் கொடுத்து விடுவதற்கென்றே ஒருவரை நியமித்து விடுவார்கள். இதனால் மாருட்டங்கள் ஏற்படமாட்டாது.

இங்கும் நாம் இந்த நல்ல வழக்கத்தை பின்பற்றலாம் அல்லவா? கல்யாண வீடுகளில் சிறுவர்களுக்குத் தான் குறைவா? ஒருவரைப் பிடித்து வந்து இந்த வேலைக்கு அமர்த்தி விடுவது சுலபம்.

சங்கீதக் கச்சேரி போன்ற கலை நிகழ்ச்சிகள், வேறு பொதுக் கூட்டங்களை நடத்தும் நிர்வாகிகள் சம்பளத்துக் காயினும் ஒருவரை இவ் வேலைக்கு அமர்த்தி வைப்பது நல்லது.

கோயில் திருவிழாக்களிலும் சினிமா கொட்டகைகளிலும் சைக்கிள்களை பாதுகாத்து கொடுப்பதற்கு ஐந்துசதமோ பத்து சதமோ கூலி வாங்குகிறார்கள். சினிமாக்காரர் தான் இப்படிக் காசடிக்கிறார்கள் என்றால் கோயில்களிலும் கூலி கொடுக்க வேண்டுமா? தண்ணீர்ப் பந்தல் வைப்பது போல இதையும் ஒரு தர்ம கைங்கரியமாக, சிரமதானமாக செய்யப் படாதா?

—வழிப்போக்கன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மேற்கு ஆசிய பிரச்னையில் சமாதான தீர்வு ஏற்படும்'

## சோவியத் பிரதமர் நம்பிக்கை

மாஸ்கோ, ஜூலை 4

மேற்கு ஆசிய பிரச்னையில் சமாதானத் தீர்வு ஏற்படுவதற்கு நல்ல வாய்ப்புக்கள் இருப்பதாக சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் நேற்று நடைபெற்ற இரவு விருந்தொன்றில் கூறினர்.

இங்கு வந்துள்ள பிரெஞ்சு பிரதமர் திரு. பொம்பாடோவுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே அவர் மேற் கண்டவாறு சொன்னர்.

பிரெஞ்சுப் பிரதமருடன் நடாத்திய பேச்சுவார்த்தையிலிருந்து சோவியத்தின் கருத்துக்கள் சிலவற்றுக்கு பிரெஞ்சு உடன்பாடு தெரிவிப்பதாகக் கூறிய திரு. கொஸிஜின், இஸ்ரேல்—எகிப்து யுத்தத்தைத் தணித்து, சமான தீர்வை ஏற்படுத்தலாமென்றுநம்பிக்கை தெரிவித்தார்.

சென்றவாரம் பிரெஞ்சு அதிபர் டிகோலுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் சில அம்சங்களை சோவியத் பிரதமர் நினைவுபடுத்தினர். சோவியத் பிரதமருடன் பிரெஞ்சு அதிபர் டிகோல் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது, திரு. பொம்பாடோவும் கூடவேயிருந்தார்.

பிரெஞ்சுப்பிரதமர் சோவியத் தலைவர்களுடன் இங்கு புதிய சுற்றுஉயர் நிலைப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்கள்.

## பர்மாவில் மா-சே-துங் கொடும்பாவி எரித்தனர்

ரங்கூன், ஜூலை 4

பர்மாவில் சீன எதிர்ப்பு வலுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. நேற்று 50 பல்கலைக்கழக மாணவர்கள் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்கள்.

சீனத் தலைவர் மா-சே-துங் கொடும்பாவி எரித்தார்கள், இந்த பல்கலைக் கழக மாணவர்கள். மா-சே-துங்கின் பிரேம் போட்ட படங்களை நடு ரோட்டில் வைத்து நொறுக்கினர்கள்.

ரங்கூனில் நடைபெற்ற சீன ஆர்ப்பாட்டங்கள் வெளிநாட்டுச் சீனர்களால் திட்டமிடப்பட்டு நடத்தப்படும் சதிச்செயல் என்று பர்மியப் பத்திரிகையான 'கார்டியன்' கருத்துத் தெரிவித்துள்ளது.

## பொருட்காட்சி மூடப் பட்டது

காத்மாண்டு, ஜூலை 3

நேபாள மன்னர் மகேந்திராவின் பிறந்த தின விழாவையொட்டி நடைபெற்ற பொருட்காட்சி நேற்றுடன் முடிக்கப்பட்டது.

இரண்டுநாட்கள் முன்னதாவே பொருட்காட்சி மூடப்பட்டது.

இதற்குக் காரணம், பொருட்காட்சியில் இரு தினங்களுக்கு முன் நடைபெற்றகலவரங்களேயாகும்.

சீன அரங்கில் மாசேதுங் உருவப்படமொன்று வைக்கப்பட்டிருந்ததை நேபாள இளைஞர்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியிருந்தனர்.

## தனிமுறை ஆலோசனைக்கு ஐ.நா. மகாசபைஒத்திவைப்பு

ஐ. நா. நியூயோர்க், ஜூலை 4

மேற்கு ஆசிய விவகாரம் குறித்து ஐ. நா. மகாசபையின் அவசரக் கூட்டம் தனிமுறை ஆலோசனைக்காக இன்றிரவு 8 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மேற்கு ஆசிய விவகாரங்களின்மீது தாக்கல் செய்யப்பட்ட ஏழு தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு இன்று இரவு மகாசபைமீண்டும் கூடும்போது நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. இந்த ஏழு தீர்மானங்கள்குறித்து அங்கத்தவர்கள் தனிமுறை ஆலோசனை நடாத்துவதற்காகவே நேற்றிரவு மகாசபை ஒத்திவைக்கப்பட்டது.

ஐ நா. மகாசபையில் பாரதம் உட்பட மண்டல சார்பற்ற நாடுகள் தாக்கல் செய்த மேற்கு ஆசியாபற்றிய தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

## கேரளத்தில் பெரிய தொழில் பேட்டை

திருவனந்தபுரம், ஜூலை 4

புதிய தொழில்பேட்டை இங்கு நேற்று இயங்கத் தொடங்கியது. பாரதத்திலுள்ள தொழில் பேட்டைகளில் பெரிய தொழில் பேட்டை இதுதானெனத் தெரிவிக்கப் பட்டது. 32 பிரிவுகளைக் கொண்ட இந்த தொழில் பேட்டையில் 3 பிரிவுகள் ஏற்கனவே இயங்கத் தொடங்கி விட்டன.

## கல்லூரிகளில் மாலை வகுப்புகள்

சென்னை, ஜூலை 3

மாலை நேர வகுப்புகளைத் தனியார் கல்லூரிகள் நடாத்த முன்வந்தால், அது பற்றி கவனிக்கப்படும் என்று தமிழகராஜ்யக்கல்விமந்திரிதிரு. இரா. நெடுஞ்செழியன் கூறியுள்ளார்.

சென்னை சட்டக் கல்லூரி கலைக் கல்லூரி ராணிமேரிகல்லூரி ஆகிய பல கல்லூரிகளில் மாலை வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கல்லூரிகளிலுள்ள இட நெருகடியைத் தீர்ப்பதற்காக இவ்விதமாலைவகுப்புகளைஅதிகமானகல்லூரிகளில் கொண்டு வருவதற்கான ஊக்கத்தை அரசாங்கம் அளிக்குமென்றும், இதற்கான சட்டத்தைக் கொண்டு வரவும் அரசாங்கம் ஆலோசித்துள்ளதாகவும் கல்வி மந்திரி மேலும் தெரிவித்தார்.

## யாழ். அமெரிக்க நூல்நிலைய இடம மாறுகிறது

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க கலாச்சார நூல் நிலையம் இடம்பெயர்கிறது. யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தின் ஒரு பகுதியில் அமெரிக்க கலாச்சார நூல் நிலையம் இனி இயங்கும்.

இப்போது நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள அமெரிக்க கலாச்சார நூல் நிலையத்திலிருந்து நூல்கள் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய மாடிக்கு நேற்று கொண்டுசெல்லப்பட்டன.

## இ. போ. ச. விடுதிச் சாலைகள்

கொழும்பு, செவ்.

இலங்கைப் போக்குவரத்து சபை முக்கியமான பஸ் நிலையங்களுள்ள இடங்களில் விடுதிச் சாலைகளை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

பிரயாணிகள் தங்குவதற்கும், உணவு அருந்துவதற்கும் ஏற்ற விதத்தில் இந்த விடுதிச்சாலைகளை அமைக்கத் தேசிய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா ஏற்பாடுகளைச் செய்துள்ளார். தூரப் பிரயாணம் செய்வர்களுக்கு இந்த விடுதிச் சாலைகள் பெரிதும் பயனுள்ளவையாக இருக்கும்.

# 'நாடற்றவர்எனநாம்சொல்லவில்லை; அவர்கள்தலைவர்களேசூட்டினர்கள்'

## இலங்கை-இந்தியர் பிரச்னை குறித்து சென்னையில் ஷேர்லி விளக்கம்

சென்னை, ஜூலை 4

"இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'நாடற்றவர்கள்' என்ற ஒரு தனிப் பிரிவினர் கிடையாது. இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய பிரதிநிதிகள் அந்தப் பெயரை வழங்கியுள்ளனர்" என்று இங்குள்ள இலங்கைத் தூதர் ஷேர்லி அமரசிங்கா கூறினர்.

திரு. ஷேர்லி அமரசிங்கா ஐ. நா.வில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டிருப்பதால், அவருக்கு இலங்கை உதவித் தூதர் திரு. செனிவரத்ன ஒரு பிரிவுபசார விழா நடத்தினர். அப்பொழுது நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற் கண்டவாறு சொன்னர்.

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்தியர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது பற்றி, தமிழக முதன் மந்திரி திரு. அண்ணதுரையுடன் பேசினேன். அவர், இவ்விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டினர் என்றும் திரு. ஷேர்லி சொன்னர்.

### எவ்வாறு திரும்ப அனுப்புவது?

"இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கு இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்களில் 5 லட்சம் பேரை எவ்வாறு பொறுக்கி எடுப்பீர்க"ள் என்று கேட்டதற்கு இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தின் கீழ் வருகிறவர்கள் அனைவரும்இந்தியப்பிராஜாவுரிமையையோ அல்லதுஇலங்கைப் பிரஜாவுரிமையையோ தருமாறுகேட்டுக்கொண்டுமனுக்களை அனுப்புமாறு கோரப்படுவர். அந்த மனுதாரர்களிடையேயிருந்து இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படவேண்டியவர்களை இலங்கை அரசாங்கம் பொறுக்கி எடுக்கும்.

## கண்ணதாசன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 4

அரசாங்கத்தின் அட்டூழியத்திலிருந்து காங்கிரஸ் ஊழியர்க்கு பாதுகாப்பு அளிக்க தொண்டர்படைகள் திரட்டப்பட வேண்டுமென்று திருவல்லிக்கேணி இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விஷயத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவில்லையென்று கவிஞர் கண்ணதாசன் குற்றஞ்சாட்டினர்.

## பரீட்சை மோசடிக்கு ஒரு பேனு

வண்டன், ஜூலை 4

பரீட்சையில் மோசடி செய்ய உதவும் வகையில் ரேடியோ டிரான்ஸிஸ்டர் கருவியைக்கொண்ட பேனு ஒன்று இருப்பதாக தேசிய மாணவர் யூனியனின் சஞ்சிகையான 'மாணவர் செய்தி தெரிவித்துள்ளது.

ரேடியோ டிரான்ஸ்மீட்டருக்கான ஏரியல் பேனுவின் உடற்பகுதியில் பொருந்துவதாக உள்ளது. நுண்ணியவையான மற்றக் கருவிகள் பேனுவின் மூடிப் பகுதியில் அமைந்துள்ளன. இவற்றை விளக்க அச் சஞ்சிகையில் விளக்கப்படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பேனுவின் உச்சியில் 'மைக்'கைப் பொருத்திக் கொள்ள முடியுமென்றும், அது சாதாரணநிலையில் இருந்து எழுதும்போது வாய்க்கு அருகில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பரீட்சை எழுதுபவர் தான் கேட்கவேண்டிய விஷயங்களை அந்த 'மைக்' மூலமாகக் கூறிவிடலாம்.

எனினும் விடைகளைப் பெறுவதானல் நுண்ணிய ரிசீவர் கருவிதேவை. இதனை சொற்ப தொகையைக் கொண்டு வாங்கிவிடலாம் என அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக தமிழாராய்ச்சி மகாநாடு

# 23 நாடுகளைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் கலந்துகொள்வர்

## தமிழக கல்வி மந்திரி நெடுஞ்செழியன் தகவல்

சென்னை, ஜூலை 4

அடுத்த வருடம் ஜனவரி மாதம் மூன்றும் திகதியிலிருந்து பத்தாம் திகதி வரை தமிழகத்தில் நடைபெறவிருக்கும் உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் 23 நாடுகளைச் சேர்ந்த 200 க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இந்தத் தகவலை தமிழக கல்வி அமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் நேற்று இங்கு தமிழாராய்ச்சி மகாநாடு சம்பந்தமாக நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் வெளியிட்டார்.

நடக்கவிருக்கும் தமிழா[illegible] ஒவி[illegible] அங்கிய கலையம்சம் கொண்ட பொருட்காட்சியொன்றைச் சிறப்பாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

### கலாச்சார பிரயாணம்

தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக வரும் வெளிநாட்டு அறிஞர்களை உள்ளடக்கி தமிழகத்தில் ஒரு கலாச்சார அடிப்படையில் ஒரு பிரயாணத்தை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதென்றும், இந்தப் பிரயாணத்தால் வெளிநாட்டு அறிஞர்கள் தமிழகத்தின் கலை, கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்துமென்றும் தமிழக கல்வி அமைச்சர் கூறினர்.

### ரூ. 10 லட்சம் செலவாகும்

தமிழகத்தில் நடக்கப் போகும் இந்தத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு பத்து லட்சம் ரூபாய் செலவாகுமெனக் கணக்கிடப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். கருத்தரங்கு, மகாநாடு, பொருட்காட்சி, கலாச்சார பிரயாணம் ஆகியவைகள் இந்தச் செலவுத் தொகைக்குள் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு உரியவர்களல்லர்"

உரும்பராய், செவ்.

"ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு உரியவர்கள் அல்லர். ஒரு மாணவனது உளப்பாங்கையும் சூழலையும் மட்டிட்டுக் கடமையாற்றும் ஓர் ஆசிரியனை அடிக்கடி இடமாற்றம் செய்வது அவ்வப் பாடசாலைகளையும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களையும் மிக மிகப் பாதிக்கும். எனவே ஆசிரியர்களது சம்மதமின்றி வலுக்கட்டாயத்தின் மீது தலைமையாசிரியர் அங்கீகாரமின்றி ஆசிரியர்களை இடமாற்றம் செய்யக் கூடாது. வருடங்களின் இடைப்பகுதியில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது மாணவர்களது கல்விக்குப் பெரும் கேட்டை விளைவிப்பதாகவே இருக்கும். எனவே ஆசிரியர்களை வலுக்கட்டாயத்தின் பேரில் சாதாரண குமாஸ்தாக்கள் போல் இடமாற்றம் செய்யாமல் இருக்கும்படி வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்க மூலம் அரசாங்கத்தைக் கோருதல் வேண்டும்" என்னும் தீர்மானம் வலி. கிழக்குத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நீர்வேலியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வேறு பல தீர்மானங்களும் நிறைவேறின.

3-ம் தவணை ஆரம்பத்தில் சங்கீத விழாவை நடத்துவதெனவும், வருட முடிவில் மூன்றும் தரப் பரீட்சையை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆசிரியர்களது எதிர்காலப் பிரச்னைகள் பற்றி திருவாளர்கள் பொ. வேலும்மயிலும், வே. தம்பையா, எஸ். வி. வேலுப்பிள்ளை ஆகியோர் பேசினார்கள்.

## பழைய மாணவர் சங்கம

பளை, செவ்.

பளை மகாவித்தியாலயத்தில் அதன் பழையமாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கல்லூரி அதிபர் திரு. இராசநாயகம் தலைமை வகித்தார். பழைய மாணவர்கள் பாடசாலை வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்களென்றும் அவர்களது ஒத்துழைப்பு பாடசாலை வளர்ச்சிக்கு அவசியமென்றும் அதிபர் குறிப்பிட்டார்.

தலைவராக சி. இராசநாயகமும், உபதலைவராக ச. சின்னத்தம்பியும், செயலாளராக ம. குமாரவேலுவும், தனாதிகாரியாக இ. நாகேந்திரமும், நிர்வாகசபை உறுப்பினர்களாக சு. ஏகாம்பரம், சி. தணிகாசலம், செல்வி கள் இ. இராஜேஸ்வரி, செ. கு பாக்கியம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கிணற்றுள் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

மதுபானம் அருந்திவிட்டு எண்ணை தேய்த்து முழுகச் சென்ற ஒரு வயோதிபர் கிணற்றில் தவறி விழுந்து மரணமான சம்பவமொன்று வசாவிளானில் நடந்துள்ளது.

வசாவிளானைச் சேர்ந்த முருகேசு பொன்னுத்துரை என்ற [52 வயது] வயோதிபரின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

கிணற்றில் விழுந்தவரை அயலயவர்கள் வெளியில் தூக்கினார்களென்றும், மயக்கமானநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டாரென்றும், அங்கு சிறிது மயக்கம் தெளிந்த சமயம், கட்டிலிலிருந்து விழுந்தாரென்றும் அதன்பின்னர் மரணமானாரென்றும் விசாரணையின்போது கூறப்பட்டது.

என்ன காரணத்தினால் மரணம் ஏற்பட்டதெனத் தெரியாதென இரு டாக்டர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரேதபரிசோதனை நடைபெற்றது.

டாக்டர் திருநாவற்கரசு, இறந்தவரின் மனைவி ஆச்சிமுத்து, இராசதுரை ஆகியோர் சாட்சியமளித்தனர். விபத்தினால் ஒற்பட்ட மரணம் என மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். இராசநாயகம் தீர்ப்பளித்தார்.

## எதிரிகளுக்கு தண்டனை

சாவகச்சேரி, திங்கள்

மந்துவில் வாசிகளான சின்னத்தம்பி கந்தையா, பொன்னன் தம்பிராசா ஆகிய இருவரும் அதே ஊரைச்சேர்ந்த வேலன் பாலன் என்பவரையும் பாலன் மனைவி அன்னத்தையும் வாளால் வெட்டிக் காயப்படுத்தியதாகச் சாவகச்சேரிப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு முதல் எதிரி கந்தையாவிற்கு முதல் குற்றச்சாட்டிற்கு இரு மாதச்சிறை தண்டனையும் இரண்டாம் குற்றச் சாட்டிற்கு ஒரு மாதச்சிறைத் தண்டனையும் இரண்டாம் எதிரி தம்பிராசாவிற்கு இருமாதச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## பூநகரி மக்கள் அதிருப்தி

பூநகரி, திங்கள்

அண்மையில் நடைபெற்ற கரியாலை-நாகபடுவான் காணி விநியோகம் பற்றிப் பூநகரி மக்களிடையே அதிருப்தி நிலவுகிறது. பூநகரியைச் சேர்ந்த பல படித்த இளைஞர்களும், விவசாய இளைஞர்களும் காணி கோரி மனுச் செய்திருந்தபோதிலும் மிகக் குறைவான தொகையினருக்கே காணி கொடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. வெளியூரைச் சேர்ந்த பலருக்கு காணி கிடைத்திருக்கும்போது உள்ளூர் வாசிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதற்குரிய காரணம் தெரியாது விழிக்கின்றார்கள். இனிமேல் நடைபெறும் காணிப் பங்கீடுகளிலாவது விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உள்ளூர் வாசிகளுடைய நிலமில்லாக் குறையை நிவர்த்திசெய்ய வேண்டுமெனக் கோரி படித்த வாலிபர் சங்கம் மனு அனுப்பத் தீர்மானித்துள்ளது.

## புதிய பஸ்களை அனுப்பக் கோருவர்

பூநகரி, திங்கள்

பூநகரி பஸ்சேவை இப்பொழுது மிக ஒழுங்காக வருவதையிட்டுப் பொதுமக்கள் இ.போ.சவைப் பாராட்டியுள்ளார்கள். பொதுமக்கள் அடிக்கடி புகார்செய்ததைத் தொடர்ந்து கிளிநொச்சி எம். பி. திரு. ஆ. பொ. இரத்தினம் முயற்சி எடுத்ததின் காரணமாக பஸ் சேவை சீரடைந்துவருகின்றது. பூநகரி-மன்னார் ரோட் பெரும் பகுதியும் இப்பொழுது திருத்தப்பட்டு வருகின்றது. மழைகாலத்திலும் பஸ்சேவைதொடர்ந்து நடைபெறுமெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றார்கள். கிளிநொச்சி- பூநகரிபஸ் சேவையிலீடு பட்டிருக்கும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதால் புதிய பஸ்களை ஓடவிடும்படி மக்கள் மனுச் செய்யவிருக்கிறார்கள்.

## ஆசிரியர்கள் வரவேற்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

முன்னாள் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபரும் தற்போது திருமலை துணை ஆயராய் பதவி வகிப்பவருமான வந்தனைக்குரிய பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையவர்கள் தமது அபிஷேகத்தின் பின் முதல் முறையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் போது யாழ். மேற்றிராசன கத்தோலிக்க ஆசிரியர்கள் அவருக்கு யாழ். நகரசபை மண்டபத்தில் வரவேற்பு அளிக்கவிருக்கின்றனர்.

## இன்று திறக்கப்படும

யாழ்ப்பாணம், புதன்

மயிலிட்டியில் புனருத்தாரணம் செய்யப்பட்ட வை. டபிள்யூ. சீ. ஏ. கட்டிடம் இன்று மாலை 5 மணிக்குத் திறந்து வைக்கப்படும். இலங்கை வை. டபிள்யூ. சீ. ஏ.யின் தலைவி லேடி. வி. குமாரசாமி இதனைத் திறந்து வைப்பார். இதற்கான ஒழுங்குகளை அப்பகுதிக் காரியாதிகாரி திரு. டபிள்யூ. பற்றிக் மேற்கொண்டுள்ளார். [ந. நி]

## தேநீர் விருந்து

கோப்பாய், செவ்

கோப்பாய் கிராமசபையில் பலவருடகாலமாக பிரதம லிகிதராகக் கடமையாற்றி தற்போது யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு இடமாற்றம்பெற்றிருக்கும் திரு. ஏ. அலோசியசை பாராட்டுமுகமாககிராமசபை அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரால் கிராம சபைத்தலைவர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் தலைமையில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. [illegible]

# 'விவேகானந்தரை நினைவூட்டுகிறார்' — நீதியரசர்

# 'வடமொழி அறிஞன்' — கி. வா. ஜ

## சமரசஞானக்கோவை ஆசிரியருக்கு கொழும்பில் புகழ்மாலை

வெள்ளவத்தை, செவ்.

"சமரச ஞானக்கோவையை வெளியிட்ட திரு. இராமச்சந்திரன் தெய்வ பக்தி முதிர்ந்து கனிந்த ஓர் அன்புப் பழம். மதய்வீக மணம் கமழும் இந்த உத்தமரைக் கௌரவிப்பதையிட்டு ஈழமக்களாகிய நாம் பெருமைப்பட வேண்டும். சாதி, மதபேதமற்றசமரச உலகை ஏற்படுத்துவதற்கு அவரது ஞானக்கோவை உதவுகிறது. அவரது சமய வெளியீடான றிலிஜஸ் டைஜஸ்ட் என்ற ஆங்கில சஞ்சிகையின் தொண்டு மிகப் பெரியது. ஆசியாவிலும் இதர மேல் நாடுகளிலும் நடைபெற்ற சமய மாநாடுகளில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் பெருமை வாய்ந்தவை" என்று உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சைவப் பெரியார் திரு. க. இராமச்சந்திரனின் 'சமரசஞானக் கோவை' வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் "1963-ல் அமெரிக்காவில் தென்கரில் நடைபெற்ற சர்வசமய மகாநாட்டில்பல தேசத்து கலைஞர்களும் பங்கு பற்றிய வேளையில் திரு. இராமச்சந்திரன் 'ஜீவ ஒற்றுமை' என்னும் விஷயம் பற்றி நிகழ்த்திய உருக்கமான உரை இன்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்னர் சிக்காகோவில் விவேகானந்தர் நிகழ்த்திய உரையை ஒப்பதாகவிருந்தது எனலாம்" என்று கூறினார்.

திருமதி பொன்னம்மாள் கிருஷ்ண பிள்ளை பேசுகையில் "சிவனடியாரைப் போற்றுவது சிவனைப் போற்றுவதற்குச் சரியானதாகும். தமிழ் மணமும், சைவ மணமும் கமழும், பெரியார் இராமச்சந்திரனின் சமரச ஞானக்கோவை உலக அமைதிக்கோர் அன்புப் பழமாகும்" என்று கூறினார்.

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் பேசுகையில் கூறியதாவது:

"விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகளை உலகம் அறிந்து பாராட்டுவதற்கு முன்னர் மெய்ஞான ஆராய்ச்சி பாரத நாட்டில் நிகழ்ந்துள்ளது. சித்துப் பொருளைப் பற்றிய ஆராய்ச்சியாக உண்மைச் சோதனையாக விளங்கிய மெய்ஞான ஆராய்ச்சிக்குரிய ஆய்வுக்கூடமாகப் பாரதநாடு விளங்கியது. இவ்வாராய்ச்சிகளின் முடிவில் கண்டறிந்த உண்மை, முடிந்த முடிவாக இருக்கிறது. சைவ சமயத்தின் பெருமையை உலகமெல்லாம் பரப்ப முன்வந்த திரு. இராமச்சந்திரன், வடமொழி நூற் கருத்துக்களை நன்கு அறிந்தவர். வட, தென்மொழிகளின் பொதுமையைப் பார்த்து வேதாந்த சித்தாந்தங்களின் ஒப்புமையைத் தெரிந்து அதன் பண்புகளை எல்லாம் சமரச ஞானக்கோவையில் கட்டுரையாக வடித்துள்ளார்.

சரித்திர ஆராய்ச்சி உண்மைகளையும், விஞ்ஞானக் கருத்துக்களையும், தத்துவக் கருத்துக்களையும் கொண்ட உண்மை நூலாக விளங்குகிறது சமரச ஞானக்கோவை. தெளிவும், விரிவும் உடைய அறிவையும், அன்பையும் ஒருங்கு சேர்த்த உள்ளத்திலிருந்து எழுந்த மணிக் கருத்துக்களைச் சமரச ஞானக்கோவையில் காணலாம்."

திரு. க. நடராஜன் உட்படபலர் சமரச ஞானக்கோவையைப் பாராட்டிப் பேசினர் திரு. முத்தையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

## வித்தியாதரிசி

புன்னாலைக்கட்டுவன், செவ்.

கோப்பாய்ப் பாடசாலைகளின் வட்டார வித்தியாதரிசியாக திரு. வி. சிவகுரு நியமிக்கப்பட்டுள்ளார்.


ஜெனரல் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான

றப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான

தற்காலிக கட்டட தளபாடங்கள்

றப்பர் பொம்மைகள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி றோட், — யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் றோட்,

யாழ்ப்பாணம்

போன்: 7024



கும்பாபிஷேக தேவைகளுக்கு

தேவையான

அஷ்டபந்தன மருந்து

* கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
* திருமண விழாக்கள்
* புதுமனைப் பிரவேசம்
* புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவு சூடம், சாம்பிராணி ஊதுபத்தி, வாசனாதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்

மற்றும்

சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

* மயில் மார்க் சந்தன வில்லைகள்
* சுகந்த சந்தனப் பவுடர்

நறுமணம் கமழும்

* சந்தனக் குழம்பு

[உடன் யந்திரத்தினால் அரைத்தது]

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம

### யாழ்ப்பாண மாநகரசபை
### கேள்வி அறிவித்தல்

கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு 25-7-67-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திரத்தின் விலையாக ரூபா 5/-ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-ம் செலுத்தி 20-7-67ம் திகதி 12 மணி வரை மாநகர மராமத்து பொறியியலாளரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் விலை திரும்பத் தரப்படமாட்டாது. ஆனால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் உடன்படிக்கையைச் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் திரும்பத் தரப்படும்.

ஏனைய விபரங்களை மராமத்து பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. கொழும்புத்துறைச் சந்தைக் கட்டிடம் கட்டல்- வட்-5.

2. ஈரப்பிலாவடி வாய்க்கால் அணைச்சுவர் கட்டல். வட்-12.

கட்சன் செல்வராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
30-6-67. 2396

### விளம்பரம்
### தண்ணீர் இறைக்கும் யந்திரம்
### பெற்றுக்கொள்ளுதல்

காங்கேசன்துறை பட்டின சங்கத் தலைவரால், ஒரு எண்ணையில் இயங்கும் தண்ணீர் இறைக்கும் யந்திரம் பெற்றுக்கொள்வதற்கு, 1967-ம் ஆண்டு ஆடி மாதம் 19-ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக சீல் வைத்த உறைகளில் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

விண்ணப்பகாரர் 1967-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக, ரூபா 10/- விண்ணப்பப் பிணைப்பணமாகக் கட்டி, விண்ணப்பப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் யாவும் காங்கேசன்துறை பட்டின சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்
ஆ. வ. சதாசிவம்,
தலைவர்,
காங்கேசன்துறை,
பட்டின சங்கம்.

பட்டின சங்க அலுவலகம்,
காங்கேசன்துறை.
2-7-1967 2391

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-20, 9-45
விடுமுறைதினங்களில் 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
**தங்கத் தம்பி**

வலிகிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின்
சமாசத்தின் ஆதரவில்
**சர்வதேச கூட்டுறவாளர் தின விழா 1967**
காலம்: -7-67 [புதன்கிழமை] பிற்பகல் 5 மணி
இடம்: சமாசம் நீர்வேலி
விசேட நிகழ்ச்சி
சொற்பொழிவு, நடனம், நாடகம், சங்கீதம்,
நாதஸ்வரக் கச்சேரி, வாணவிளையாட்டுக்கள்.
அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நீர்வேலி க. இராசரத்தினம்,
3-7-67. 2395 விழாச் செயலாளர்.

இங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ண் [பண்டாரவளை]

இன்று முதல்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

**ஜெய்சங்கர், ஜெயலலிதா**
**நாகேஷ், மனோகர்**
**மாதவி, சகஸ்ரநாமம்,**
**பண்டரிபாய், ராமதாஸ்**
நடிக்கும்
**நீ**
இசை: விஸ்வநாதன்
[பாஸ்கள்ரத்து]

### பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்றிக் கோட்டில் எழுதுமட்டுவாழ் தெற்கு கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை. இவர் தனக்காகவும் பெரியகேணி என நாமங்கொண்ட ஆதனத்திற் கோவில் கொண்டெழுந்தருளிய சிவஞானப்பிள்ளையார் கோவிலின் மனேச்சராகவும் திறஸ்ரியாகவும் வளக்காளி

இல. 3332

எதிராக

1. கரம்பகம் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்.
2. எழுதுமட்டுவாழ் வடக்கு சரவணமுத்து சோமசுந்தரம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை.
3. உசன் வயித்திலிங்கம் மாணிக்கம் கைம்பெண் ஜெயலட்சுமி.
4. அல்லாரை தம்பையா மாணிக்கம்.
5. கரம்பகம் தாமு கந்தையா. எதிரிகள்

கிராமசேவகர்/பிஸ்கால்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப்பகுதி எழுதுமட்டுவாழ் கோவிற்பற்று எழுதுமட்டுவாழ் தெற்கு இறை பெரிய கேணி பளை நி. பர. 12. அடம்பன்தோட்டம் நி.பர. 17 ஆட்சியில் மேலதிகம் நில. பர. 11. கூடிய நி. பர. 40 நாற்பதுக்கெல்லை கிழக்கு ஒஷ கோயில் வீதி வடக்கு. ஒழுங்கை மேற்கு ரேட்டு தெற்கு கையொழுங்கையும் கனகசபை பெண் தவமணிக்கும் பங்காளருக்குமுரியவாதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளனைத்தும் என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கிறதென்று இத்தாலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1967-ம் ஸ்ரீ ஆடி மீ 7-ந் உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள். இவ்வாதனத்தில் யாரேனும் நயமுரித்துச் சொந்தை இருப்பின் கோட்டில் குறித்த திகதியில் வெளியிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கோட்டாரின் கட்டளைப்படி

ஒப்பம்
சக்கிடுத்தார்
1967-ம் ஸ்ரீ ஆனிமீ 19ந்உ.
2397

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
**குமரிப் பெண்**

**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Peter Mann
Jocelyn Lane
in
**The Sword of Alibaba**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
திலிப்குமார்
வைஜயந்திமாலா
நடித்த
**பைகாம் (Paigham)**
[ஹிந்தி

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரிவிளம்பரம்

### தேவை

நல்லெண்ணெய்

அதிக அளவு நல்லெண்ணெய் வழக்கமாக எடுப்பதற்குத் தேவை. நல்லதரமானதோவென பரீட்சித்துப் பார்த்தே விலை நிர்ணயிக்கலாம். 6, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 2493

### விற்பனைக்கு

மலைவேம்பு:

மூளாய் அமெரிக்கன் மிஷன் தேவாலய வளவிலுள்ள 20 அடி நீளம் 8 அடி சுற்றளவுள்ள மலைவேம்பு மரம் (மகோக்கனி) 14-7-67-ந் திகதி காலை 10 மணியளவில் விற்கப்பட இருக்கிறது. விபரங்கட்கு: தேவாலய காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். 2492

வீடும் வளவும்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அந்தியகால சகாயநிதிச் சங்கக் கட்டிடத்திற்குப் பின்னால் இரண்டு அறைகள் கொண்ட சிறிய வீடு, கிணறு, கக்கூசு, மின்வெளிச்சம் ஆகியவைகளுடன் கூடிய 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு:- அந்தியகாலசகாய நிதிச் சங்கம் லிமிற்றெட், 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2495

காணி:

நல்லூர், செட்டித்தெருவில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. என். சுப்பிரமணியம், 31, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 2489

நாய்க்குட்டிகள்:

காணி

அளவெட்டி வடக்கு, கூத்தன் சீமாவில் தெரு ஓரத்தில் எழு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வி. மகாலிங்கம், சாத்தாகலட்டி, அளவெட்டி. 2498

### சங்கானை ப.ச. தீர்மானங்கள்

சங்கானை, திங்கள்

சங்கானைப்பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம் பட்டின சபைத்தலைவர் திரு. எஸ்.கே. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது.

சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு வசதிஅளித்தல், வரிவசூலிப்பவர்களுக்கும் ஆயுள்வேத வைத்தியசாலைப் பணியாளர்களுக்கும் வேதனத்தை அதிகரித்தல், தொட்டிலடிச்சந்தியிலிருந்து சீரணிச்சந்திக்குட்பட்ட சிறு ரோட்டுகளைச் சங்கானைப்பட்டின சபையுடன் சேர்த்தல் முதலிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### சமாஜ மனேஜர் தற்கொலை

சங்கானை, செவ்.

சங்கரத்தையைச் சேர்ந்தவரும் சங்கரத்தை கூட்டுறவு சமாஜ மனேஜருமான மார்க்கண்டு இராசதுரை வயது 52 கடந்த திங்கட்கிழமை காலை தனது சகோதரியான சங்கரப்பிள்ளை செல்லம்மா வீட்டில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இவ்விஷயம் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சங்கானை பொலிசைச் சேர்ந்த கான்டபிள் சாந்தலிங்கம் சாட்சியங்களை பதிவு செய்தார்.

டாக்டர் எஸ். குலத்துங்கம் பிரேத பரிசோதனை நடாத்தினார். மரண விசாரணை அதிகாரி கே. சேனாதிராசா விசாரணை முடிவில் நச்சுத்திராவகம் அருந்தியதால் ஏற்பட்ட மரணமென த் தீர்ப்பளித்தார்.

### வாடகைக்கு

மேல்மாடி:

குடியிருப்பதற்கு அல்லது வியாபாரம் செய்வதற்கு விசாலமான மேல்மாடி சகல வசதிகளுடனும் யாழ்ப்பாணத்திலுள்ள காங்கேசன்துறை வீதியில் உண்டு. விபரங்களுக்கு விளம்பர இல. 2494, மே/பா. 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2494

### காணவில்லை

கைக்கடிகாரம்

ரேட்கோல்ட் செயின் போட்ட பெண்கள் அணியும் கைக்கடிகாரம் 3-7-67 பி.ப 8-15 மணியளவில் காரைநகர் நடராஜ மண்டபத்திற்கு அண்மையில் தொலைந்துவிட்டது. கண்டெடுப்பவர்கள் [illegible] யவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் சேர்த்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும். 2496

### கல்வி

வகுப்புகள்:

தபாற் தந்தியாளர், மத்திய எழுதுவினைஞர் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, (Jaffna Tutorial College) கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர், நெல்லியடி, கரவெட்டி. 2497

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 5 - 7 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 ஓடிவிளையாடு பாப்பா — சிறுவர்நிகழ்ச்சி.

இரவு 6-15 பாட்டு — சியாமளா புண்ணியமூர்த்தி, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு — பூமணி ராசரத்தினம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 வாத்திய இசை, நேயர்விருப்பம்.

### கி. சேவையாளர் இடமாற்றம ரத்து

சுன்னுகம், செவ்வாய்

பலாலி கிராம சேவையாளர் திரு.என். கதிரேசனின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது. குப்பிளானுக்கு இவருக்கு மாற்றஉத்தரவு வந்திருந்தது. இவரது மாற்றத்தை விரும்பாத பொதுமக்கள் தத்தம் எம்.பி.க்களிடம் முறையிட்டதைத்தொடர்ந்து எம்.பி.க்களின் முயற்சியினால் இவரது மாற்றம் ரத்து செய்யப்பட்டு, ஏழாலையிலிருந்து பலாலிக்கு மாற்றப்பட்ட திரு.ஆர். பரராசசிங்கம் குப்பிளானில் கடமையாற்றநியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் தந்தி ஊழியர்சங்க காரியதரிசி தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, செவ்வாய்

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்க காரியதரிசியான திரு. ஏ. வில்லியம சிங்கோ நேற்று தற்காலிக வேலைநீக்கம செய்யப்பட்டார்.

வேலைக்குச் சென்ற இரு தபால் தரம்பிரிக்கும் ஊழியர்களை வழிமறித்து அவர்களை வேலைசெய்யவிடாது தடுத்ததாக திரு. வில்லியம் சிங்கோ மீது குற்றஞ்சாட்டப்பட்டதைத் தொடர்ந்தே போஸ்ட்மாஸ்டர் ஜெனரலால் இவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார். தபால் சேவை கட்டாய சேவையாகப் பிரகடனப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இத்தற்காலிக வேலைநீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## கடிதங்கள் குவிகின்றன
## இரவு பகலாக தொண்டர்கள் வேலை

கொழும்பு, செவ்.

தரம்பிரிக்கும் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தினத்தில் இருந்து கடிதங்கள் குவிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் தரம்பிரிக்கும் பகுதியில் இரவுபகலாக வேலை செய்துவரும் 50 தொண்டர்கள் தபால்விநியோகத்தில் தாமதத்தை நீக்க முயன்றுவருகிறார்கள் என்றும் சென்றமாதம் 29-ம் 30-ம் திகதிகளில் அனுப்பப்பட்ட கடிதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுத்தபால்கள் விநியோகிக்கப்படுவதில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## உலக மக்கள் தொகை
### ஐ.நா. தரும் புள்ளிவிபரம்

புதுடில்லி, ஜுலை 3

1965-ம் ஆண்டில் உலக மக்கள் கொகை 325 கோடியாக இருந்தது என்று ஐ. நா. வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

1960-65 க்கிடையேயான 5 வருட காலத்தில், உலக மக்கள் கொகை 1.9 சத விகிதம் பெருகியுள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

1965 ல் உணவு உற்பத்தி 1 சத விகிதம் கூடியதாகவும், தலா ஒருவருக்கான உணவு உற்பத்தி 1 சத விகிதம் குறைந்ததாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்லூரி புதிய அதிபர்கள்

கொழும்பு, திங்கள்

வடமாகாண பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலர் புதிய அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடி மத்தியகல்லூரி அதிபர் திரு. எஸ். இரத்தினசபாபதி பருத்தித்துறை ஹாட்லிகல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஹாட்லிகல்லூரி ஆசிரியர் திரு. பி. ஏகாம்பரம் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி அதிபராகவும், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர் திரு. ஜே. எஸ். ஆரியரத்தினம் மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்தியகல்லூரியின் அதிபராகவும், வேலணை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. கே. சிவசிதம்பரம் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபராகவும், கல்லூரி பரிசோதகராக இருந்த திரு. ரி. மாணிக்கவாசகர் வேலணை மகாவித்தியாலய அதிபராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

## 'ஞாயிற்றுக்கிழமையை விடுமுறையாக்குவோம்'
### —ராஜாங்க மந்திரி

நீர்கொழும்பு, திங்.

'வாரத்தில் ஐந்துநாள் வேலைத்திட்டத்தை உத்தேசித்து ஞாயிற்றுக்கிழமையையும் விடுமுறை தினமாக்க அரசாங்கம் யோசனைசெய்து வருகிறது. நாட்டின் பொருளாதார நிலைமை சீராகியதும், இந்தத்திட்டம் அமுலாகும்' என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

நீர்கொழும்பு இடைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகர் திரு. என். டென்ஸில் பெர்னாண்டோவை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வாரத்தில் ஐந்து நாள் வேலைத்திட்டம் அமுலுக்கு வந்ததும், போயா தினமும் ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறைகளாக இருக்கும். இது தொழிலாளர்களுக்கு பெரிதும் பயனாக இருக்கும்.

கத்தோலிக்க மக்களின் பூரண ஆதரவுடனேயே போயாதினத்தை விடுமுறையாக்கினோம். கத்தோலிக்க மக்களின் பிரதிநிதிகள் போயாதினத் திட்டத்துக்கு முழுஆதரவுதந்தனர். அதற்குப்பின்னரே ஞாயிற்றுக்கிழமையை வேலைநாளாகப் பிரகடனம் செய்தோம். 1970-ம் ஆண்டுக்குள் நம் நாட்டின் உணவுப்பிரச்னை தீர்ந்துவிடும்.

போட்டியிடும் அபேட்சகர் திரு. டென்ஸில் பெர்னாண்டோ, தபால் தந்தி மந்திரி மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம, கைத்தொழில் உதவி மந்திரி திரு. செல்ரன் ஜெயசிங்க உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## தீ விபத்து

வல்வெட்டித்துறை, திங்.

தொண்டமானாறு வளலாய் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான விடுதியின் ஒரு பகுதியில் நேற்றிரவு தீப்பிடித்துக்கொண்டது. தீயில் அகப்பட்ட பொருட்கள் யாவும் எரிந்து சாம்பலாகிவிட்டதாம். இச் சம்பவம் பற்றி வெளியிடத்தில் தங்கியிருந்த உயர்தர பொறுப்பதிகாரிக்குத் தெரிவிக்கவே அவர் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று சேதமுற்ற இடங்களையும் பார்வையிட்டு விசாரணை செய்து சென்றுள்ளதாகத் தெரிகிறது.

## உற்சவம

சங்கானை, செவ்வாய்

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகியது. 12-ம் திகதி தேர்த் திருவிழாவும் 13-ம் திகதி தீர்த்தமும் நடைபெறும்.

## கூட்டுறவு . . .

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டு தத்துவங்களும் உள. வியாபார மிகையை அல்லது அதில் ஒருபகுதியை உறுப்பினர்கள் சங்கக் கருமங்களிற் பங்குபற்றியதை அடிப்படையாகக் கொண்டு சங்கம் தீர்மானித்த பிரகாரம் உறுப்பினர்களுக்கு மட்டுமே பங்கீடு செய்யலாம். ஏனெனில் மிகை விலையிடல் எவரிடமிருந்து பெறப்பட்டதோ அவருக்கே உரித்தாவதுடன் திருப்பிக் கொடுக்கப்படவும் வேண்டும்.

### வாழ்க்கைக்கு ஒரு வழி

கூட்டுறவு என்பது வியாபார அமைப்பு முறையிலும் பார்க்கமேலானது. அது ஒரு வாழ்க்கை வழியாகும். இவ்வாழ்க்கை வழியின் பொருளாதார பண்பு என்பது, பொருளாதாரத் தேவைகளைச் சுரண்டும் தனவந்தக் கொள்கையை நீக்குவதாகும். ஒழுக்க அம்சங்களான நேர்மையும், திறமையும் பொருளாதார அபிவிருத்திக்கு முதற் தேவைகளாகின்றன. ஏனெனில், சங்கக் கருமங்களில் உறுப்பினர்கள் நேர்மையும் திறமையும் அற்றவர்களாக விருப்பின் ஒரு சங்கம் முன்னேற்றமடையாது. சங்கத்தை உயர்ந்த நிலையிற் கொண்டு வெற்றியடைவதற்கு, சங்கத்தால் வகுக்கப்பட்ட கோட்பாடுகளை உறுப்பினர்கள் ஒரே மனதுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறான ஒரே தீர்மானத்தின் பயனாக கூட்டுறவு, மக்களின் பொருளாதார, ஒழுக்கத் தரங்களை உயர்த்துகின்றது.

## கோழிகள் பலி

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் இருத்தலடியின் கோழிகள் பல திடீரென்று இறந்துவிட்டன. சில கோழிகளைக் காணவில்லையாம். சில விஷமிகள் நஞ்சூட்டியும், திருடியும் இருக்கலாமெனக் கருதுகின்றனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜுலை மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

டாக்டர் மனைவி கொலைவழக்கு

## "பத்மினியின் அறை அலங்கோலமாயிருந்தது"

காலி, செவ்வாய்

'பிரேத பரிசோதனையின் போது பத்மினி வாழ்ந்ததாகச் சொல்லப்படும் அறை அலங்கோலமாயிருந்தது.'

திருமதி பத்மினி குலரத்தின கொலைவழக்கு காலி மாஜிஸ்டிரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த அரசாங்க ரசாயன உதவி பரிசோதகர் திரு. செல்லையா சற்குணநாதன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ்வழக்கில் திருமதி பத்மினி குலரத்தினவை நஞ்சூட்டி கொலை செய்ததாகவும், கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் இறந்த பத்மினியின் கணவர் டாக்டர் குலரத்தின, திருமதி லவுன குலரத்தின மற்றும் இரு பணிப்பெண்கள் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரசாங்க உதவி ரசாயனப் பரிசோதகர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

ஏப்ரல் 12-ந் திகதி இன்னொரு முறை டாக்டர் குலரத்தின வீட்டுக்குப் போனபோது அங்குள்ள நஞ்சு மருந்துகள் வைக்கப்படும் அலமாரியைத் திறந்து பார்த்தேன். 'ஆர்சனிக் திராவகம்' எனப் பெயரிடப்பட்ட ஒரு போத்தலைக் கண்டேன்.

காலஞ்சென்ற பத்மினி உபயோகித்த பாத்திரத்தில் ஆர்சனிக் நஞ்சு இருந்த அடையாளத்தையும் கண்டுபிடித்தேன். 1-ம் எதிரியின் சிரேஷ்ட வழக்கறிஞராக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராகியுள்ளார்.

### பனையால் விழுந்து மரணம்

பருத்தித்துறை, செவ்

பனைமரத்தில் ஏறி கருப்பநீர் சேர்த்துக்கொண்டிருந்த ஒருவர் தவறி தலைகுப்புற நிலத்தில் விழுந்து மரண மானார். இச்சம்பவம் புலோலி கிழக்கில் நடந்துள்ளது.

வேலன்வல்லிபுரம் என்ற 32வயதானவரின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த தும்பளையைச் சேர்ந்த க.சி. இராமலிங்கம் இறந்தவரின் பெற்றோருக்குத்தகவல் கொடுத்தாரென்றும், சிறிது நேரத்தில் அவர் இறந்தார் என்றும் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரணவிசாரணை நடத்தினார். தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## கூட்டுறவாளர் தினவிழா

ஏழாலை, செவ்.

ஏழாலை ஐக்கிய பண்டசாலை அங்கத்தவர்களால், தலைவர் திரு. எம். ஆர். அல்பேர்ட் தலைமையில் நாளை பிற்பகல் ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. சொற்பொழிவுகள், நடனம், கீதம் முதலிய பல நிகழ்ச்சிகள் இடம் பெறும். யாழ்.மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பூ. குமாரசாமி விழாவில் கொடியேற்றி வைப்பார்.

### 'ஆசிரியரையும அனுமதிக்குக'

புன்னாலைக்கட்டுவன், செவ்'

பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள பஸ் வண்டிகளில் ஆசிரியரும் ஏற்றிச் செல்லப்படவேண்டும் என்றும் அவ்வாசிரியர் அடையாளச் சீட்டுகளுடன் பிரயாணஞ் செய்ய அனுமதிக்கப்படவேண்டுமென்றும் கோரும் பிரேரணை ஒன்று ஊரெழு கிராம முன்னேற்றச் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு. ச. கதிரவேலு தலைமை வகித்தார்.

### ஆணையாளர்களுக்கு பாராட்டு

சங்கானை, திங்கள்

நவீன முறையில் ஒரு நிரந்தர பஸ்நிலையத்தை யாழ்ப்பாணநகரில் அமைத்ததைப் பாராட்டி, சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் யாழ்ப்பாண மாநகர சிறப்பு ஆணையாளர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். முன்னர் பஸ்நிலையம் அங்குமிங்குமாக நகர்ந்துகொண்டிருந்ததால் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனரென்றும் நிரந்தர பஸ்நிலையம் பொதுமக்களுக்கு அதிக வசதியுடன் திகழ்வதாகவும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அபராதம்

சாவகச்சேரி, செவ்வாய்

இவ்வருடம் 8-ம் திகதி தனங்கிழப்பு என்னுமிடத்தில் ஆசைப்பிள்ளை சிவப்பிரகாசத்தை தாக்கியதாக சிதம்பரி சுந்தரம், சுந்தரம் ஆறுமுகம் ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு இருவருக்கும் தலா ரூபா 50 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்

## நாய்களால் துரத்தப்பட்ட சிறுவன் வண்டில் சில்லுக்குள் நசுங்கி மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

கோவிலுக்குசென்றுவிட்டு வரும் வழியில் நாய்களால் துரத்தப்பட்ட ஒரு சிறுவன் மாட்டுவண்டிலைத்தாண்டிச் செல்லும்போது வண்டில் சில்லுக்குள் அகப்பட்டு மரணமான சம்பவமொன்று சுதுமலையில் நடந்துள்ளது.

சுதுமலையைச் சேர்ந்த சீராளன் என்ற எட்டுவயது சிறுவனின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

சிறுவனின் வயிற்றில் மாடு இடித்ததாகவும் அதனால் சிறுவன் நிலத்தில்விழ, வண்டில் சில்லு சிறுவனின் தலையால் ஏறிச்சென்றதாகவும் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானாரென்றும்விசாரணையில் கூறப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். இராசநாயகம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து வண்டிக்காரரான விஸ்வலிங்கம் பத்மநாதனை 500 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org